# சித்தர்களின் வாழ்வியல்

**மோனிகா.உ [1] & முனைவர் ச.பிரியதர்சினி [2]**

**[1] முதுகலை முதலாமாண்டு தமிழ், [2] இணைப்பேராசிரியர்,**

**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்**

**கோயம்புத்தூர் - 641043**

**மின்னஞ்சல் – monicauthirapandi@gmail.com , priyadharshini_tam@avinuty.ac.in**

**70**

**ஆய்வு சுருக்கம்:**

சித்தர்கள் என்பவர்கள் பொது வாழ்க்கையில் இருந்து வெளிவந்தவர்கள். இல்வாழ்க்கை நிலையில்லாதது என்பதை உணர்ந்து வீட்டின்பம் அடைந்தவர்கள். சித்தர்கள் என்பவர்கள் சித்தி பெற்றவர்கள் ஆவர். சித்தர்கள் யோகக் கலையில் சிறந்து விளங்குகின்றனர் அது மட்டுமின்றி ஞானிகளாகவும் சிறந்து விளங்குகின்றனர். சித்தர்களின் வாழ்வியல் குறித்தப் பதிவுகளை எடுத்துரைப்பதாக அமைகிறது.

**திறவுச்சொற்கள்:** அட்டமா சித்தி – ஐம்பூதங்கள் -ஐந்தெழுத்து மந்திரம் -புலனடக்கம்-மெய்ஞ்ஞானம்

**முன்னுரை:**

சித்தர்கள் எத்தனை வகையில் உள்ளனர் என்ற கேள்வி அனைவராலும் கேட்கப்படும் கேள்வி ஆகும்.ஒவ்வொரு சித்தரும் ஒவ்வொரு வகையில் இருப்பார்கள். உணவு உண்பதில்,பழக்க வழக்கத்தில், பேச்சில், பாடல்களைப் பாடுவதில் போன்ற அனைத்திலும் ஒவ்வொரு வகையில் இருப்பார்கள். ஒரு சித்தரைப் போல வேறு சித்தர் இருப்பதில்லை. இத்தகைய சித்தர்களின் பாடல்கள் வழி அவர்தம் வாழ்வியல் குறித்த ஆய்வுகட்டுரையாக அமைகிறது.

**சித்தர்கள்:**

சிந்தையில் தெளிவு கொண்டவர்களே சித்தர்கள். சித்தர்களுக்கு எல்லாம் ஆதிச்சித்தனாக இருப்பது சிவபெருமான். அட்டமா சித்திகளையும் கற்றுத் தேர்ந்தவர்கள். இறப்பு என்பது மனித வாழ்வில் இயற்கையாக நிகழக்கூடியது ஆனால் மனிதன்தன் இறப்பைகணிக்க இயலாது. சித்தர்கள் மரணத்தின் ஒவ்வொரு அசைவையும் உணரக்கூடியவர்கள். இவர்கள் இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்து வந்தவர்கள். மனிதன் உருவாக்கிய பொது நெறியானநாடு, நகரம், இனம், மொழி, மதம் என அனைத்தையும் கடந்தவர்கள். சித்தர்கள் மருத்துவத்திலும் சிறந்து விளங்குகின்றனர். யோகிகள் ஆகவும் ஞானிகள் ஆகவும் விளங்கியவர்கள். மெய்ஞ்ஞானம் பெற்றவர்கள் மற்றும் அறியாமையை அகற்றியவர்கள், மன ஒருமைப்பாட்டை உடையவர்கள்.

**பதினெண் சித்தர்கள்:**

நமது நாட்டில் பண்டைக் காலத்தில் சிறந்த விளங்கிய சித்தர்கள் பதினெட்டு சித்தர்கள் ஆவர்.

1.திருமூலர்,2.போகர், 3.அகத்தியர்,4.பட்டினத்தார், 5.பத்திரகிரியார், 6.சிவவாக்கியர், 7.பாம்பாட்டிச் சித்தர், 8.பேய்ச் சித்தர், 9.குதம்பைச் சித்தர், 10.அழுகுணி, 11.இடைக்காட்டுச் சித்தர்,12.கோரக்கர், 13.கருவூர்ச்சித்தர்,14.மச்சமுனி, 15.சட்டமுனி, 16.சுந்தரானந்தர், 17.உரோமுனி, 18.கமலமுனி

இவர்களுக்கு பிறகுசித்தர்கள் இருக்கிறார்கள் இருப்பினும் இவர்கள் தான் சிறந்து விளங்கியவர்கள். காலப்போக்கில் இவர்களின் சீடர்களும்சித்தர்கள் என்றுகருதப்படுகிறார்கள்.

**அட்டமாசித்திகள்:**

அட்டமா சித்திகள் என்பது சித்தர்களின் திறமை ஆகும். அட்டமா என்பது ‘எட்டு’ஆகும். சித்தி என்பதற்கு ‘திறன்’என்பதுபொருள்.

**“அணு மாதிசித்திகளானவை கூறில்**
**அணுவில்அணுவின் பெருமையில் நேர்மை**
**இணுகாதவேகார்பரகாயமேவல்**
**அணுவத்தனையெங்குந்தானாதலென்றெட்டே”**
**(திருமந்திரம்.668)**

**அணிமா:** தன் உடலை அணுவைப் போல சிறிதாக்கிக் கொள்ளுதல்
**மகிமா:** தன் உடலை மலையைப் போல பெரிதாக்கிக் கொள்ளுதல்
**இலகிமா:** தன்உடலை பஞ்சு போல இலேசாக்கிக்கொள்ளுதல்
**கிரியா:** தன் உடலை மலையைப் போல கனமாக்கிக்கொல்லுதல்.
**பிராப்தி:** மனதில்நினைத்ததை அடைதல்.
**பிராகாமியம்:** தன்உடலை விட்டுவேறுஉடலுக்குச்செல்லுதல்.
**ஈசத்துவம்:** ஈசனின் ஐந்து தொழில்களையும் செய்வது ஆகும்.
**வசித்துவம்** : அனைத்தையும் தன் வயப்படுத்துதல்.

**மனித உடலும் ஐம்பூதங்களும்:**

நம் உடலினைஐம்பூதங்களுடன் ஒப்பிடலாம். நம் பாதத்தைநிலத்துடன் ஒப்பிடலாம், பாதத்திலிருந்து கொப்பூழ் வரை நீராகவும், கொப்பூழிலிருந்து மார்பு வரை நெருப்பாகவும், மார்பிலிருந்து தோள் வரை காற்றாகவும், கழுத்துக்கு மேல் வானம் ஆகும். இவ்வாறாக நம் மனித உடம்பானது ஐம்பூதங்களுடன் ஒப்பிட்டுச் சொல்லப்படுகிறது.

**இறைவன் வீற்றிருக்கும் இடம் :**

சித்தர்பாடல்கள் இறைவனை வழிபடும் விதம் பற்றிய செய்திகள் இடம் பெற்றிருக்கும். இறைவனை நினைத்து துதிப்பவர்கள் மனதில் இறைவன் வீற்றிருக்கிறார்.

**"மலர்மிசைஏகினான்மாணடி சேர்ந்தார்**

**நிலமிசைநீடுவாழ்வார்"**

**(திருக்குறள் – 3)**

அடிவர்களின் மனமானது. மலரைப்போன்றது என அதில் வீற்றிருக்கும் இறைவனை நினைப்பவர்கள் இந்த உலகில் இன்பமாக வாழ்வார்கள் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

**"நமசிவாய அஞ்செழுத்தும்நல்குமேல்நிலைகளும்**
**நமசிவாய அஞ்சில்அஞ்சும்புராணமானமாயையும்**
**நமசிவாய அஞ்செழுத்துநம்முளே இருக்கவே!**

**நமசிவாய உண்மையை நன்குஉரைசெய்நாதனே!"**

**(சிவவாக்கியர் 101)**

நமச்சிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை தினமும் உச்சரித்து வந்தால் எல்லா வளமும்நலமும் கிடைக்கும். உலகிற்குபஞ்சபூதங்கள் போல நம் உடலிற்கு இவ்வைந்தெழுத்தும் ஆதாரங்களாய் நின்று ஐம்புலன்கள் சிறக்க உண்மையை உபதேசியுங்கள் என சிவபெருமானைவேண்டுகிறார்.

**புலனடக்கம்:**

நம் மனதில் ஆசாபாசங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைவது ஐம்புலன்களான மெய், வாய், கண், மூக்கு, செவி என்பது ஆகும். ஐம்புலன்கள் நம்மை ஆளும்போது நமக்கு மிஞ்சுவது தீமைகளும் துன்பங்களும் மட்டும் தான். புலன்களைநாம் ஆளும் போது இன்பமும் நன்மையும் உண்டாகும். ஐம்புலன்களை அடக்கி வாழ்ந்தவர்கள் தான் சித்தர்கள். புலன்களை கட்டுப்படுத்தாமல் தவத்தினை மேற்கொள்ள முடியாது.

**"வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்**

**புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று."**

**(திருக்குறள் 273)**

தன் மனதை அடக்கதெரியாதவன் மேற்கொள்ளும் தவம்புலித்தோலைபோர்த்திக் கொண்டு பயிரைமேய்வதுபோன்றதுஎன்கிறார் திருவள்ளுவர்.

**"பார்ப்பான் அகத்திலே பாறபசு ஐந்துண்டு**
**மேய்ப்பாரும் இன்றி வெறித்துத்திரிவன**
**மேய்ப்பாரும் உண்டாய் வெறியும்அடங்கினாற்**

**பார்ப்பான் பசுஐந்தும்பாலாச்சொரியுமே".**

**(திருமந்திரம். 2843)**

பிரம்மன் படைத்த இந்த உடம்பு ஐம்பொறிகளால் ஆனது. இந்த ஐம்புலன்களைஅடக்கினால்

தான் அந்தர்யாகம்நிறைவுப் பெறும் என்கிறார் திருமூலர்.

**நிலையாமை:**

இந்த உலகில் இருக்கும் அனைத்து உயிர்களும் நிலையற்றது என்று சித்தர்கள் அனைவரும் நன்கு உணர்ந்தவர்கள். மாற்றங்களைத்தவிர மற்ற எல்லாம் நிலையற்றது. நமது உடல், இளமை, அழகு, இன்பம், செல்வம். எனவே தான் சித்தர்கள் அனைவரும் நிலையான தை இன்பத்தைதேடிச்செல்கிறார்கள்.

**“மலைபோன்ற செம்பொற்குவை வைத்திருப்பவர்**

**மறலிதான் வருகையில் வாரிச் செல்வரோ”**

**(பாம்பாட்டிச் சித்தர் பா.44)**

பெரிய மலையின் அளவு செல்வங்களைவைத்திருந்தாலும் எமன் வந்து நம்மை அழைத்துச் சென்றபின் அதற்கு என்ன பயன் என்று கேள்வி கேட்கிறார் பாம்பாட்டிச் சித்தர்.

**“நில்லாதவற்றை நிலையின என்றுணரும்**

**புல்லறி வாண்மை கடை”.**

**(திருக்குறள் 331)**

நிலை இல்லாத பொருள்களை எல்லாம் நிலையானது என்று நினைத்து மயங்குகின்ற புல்லறிவு உடையவராக இருப்பது வாய்க்கணக்கு இழிவான நிலை என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

**சித்தர்களின் ஜீவ சமாதி :**

சித்தர்களின்ஜீவசமாதிஅமைந்துள்ள இடங்கள்.

- திருமூலர் - சிதம்பரம்
- போகர்- திருக்கழுன்றம்
- அகத்தியர்-அனந்த சயனம்
- பட்டினத்தார்- திருவொற்றியூர்
- பத்திரகிரியார்- கும்பகோணம்
- சிவவாக்கியர்- கும்பகோணம்
- பாம்பாட்டிச்சித்தர்- திருஞாலம்
- பேய்ச் சித்தர்- சேங்காலிபுரம்
- குதம்பைச்சித்தர்- மாயவரம்
- அழுகுணி- நாகப்பட்டினம்
- இடைக்காட்டு- திருவண்ணமலை
- கோரக்கர்- திருகோணமலை
- கருவூர்ச் சித்தர் - கரூர்
- மச்சமுனி- திருப்பரங்குனறம்
- சட்டைமுனி- சீர்காழி

- சுந்தரானந்தர்- மதுரை
- உரோமுனி- திருக்கூந்தலூர்
- கமல முனி - திருவாரூர்

**தொகுப்புரை :**

சித்தர்கள் நிலையான பொருகளின் மீது தான் பற்றுக் கொண்டு வாழ்ந்தார்கள் இறைவன் மீதான பற்று நிலையானது மனித சமுதாயம் எவையெல்லாம் நிலையானது என்று நினைத்து மகிழ்ச்சி அடைகிறார்களோ அவை எல்லாம் நிலையற்றது என்று உணர வேண்டும். மனித சமுதாயம் நிலையான பொருள்கள் மீது பற்றுக் கொண்டு வாழ வேண்டும்.

**அடிக்குறிப்பு:**

1. திருக்குறள் – பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை – 600014, 2012,பக்கம்-8,84,102,103

**துணை நூற்பட்டியல்:**


- புலவர் இரா. இளங்குமரன், சித்தர் பாடல்கள்சிவவாக்கியார், தென்னிந்தியதமிழ்ச் சங்கம், சென்னை -600108, 2002.
- ரிஷபானந்தர், சித்தர்கள் கண்ட மானுட ரகசியம், சங்கர்பதிப்பகம் சென்னை - 600049, 2004.
- திருக்குறள் – பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை – 600014, 2012
- ஞா. மாணிக்கவாசகன், திருமூலர் திருமந்திரம், உமாபதிப்பகம் சென்னை -600001, 2014.